# அனைத்துலகச் சைவ மாநாடு - 2017

## “ சைவ சித்தாந்த மேன்மைகளும் இலங்கையரின் பங்களிப்பும் ”

## ஆய்வடங்கல்

**ISC**
**2017**

21, 22,23 - ஏப்ரல் - 2017

இந்துநாகரிகத்துறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

இரண்டாவது அனைத்துலகச் சைவ மாநாடு - 2017
ISSN No : 2478 - 0634

**பதிப்பாசிரியர் குழு**

**பிரதம பதிப்பாசிரியர்**

பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதன்

**பதிப்பாசிரியர்கள்**

கலாநிதி (திருமதி) சுகந்தினி சிறீமுரளிதரன்
கலாநிதி (திருமதி) விக்னேஸ்வரி பவனேசன்
திரு. ச. முகுந்தன்
திரு. ச. பத்மநாபன்
திரு. பொ. சந்திரசேகரம்
திரு. சி. ரமணராஜா
திரு. தி. செல்வமனோகரன்
திரு. க. கந்தவேள்

## பொறுப்புத் துறத்ததல்

இவ்வாய்வடங்கலில் இடம்பெற்றுள்ள ஆய்வுக்கட்டுரைகளின் அனைத்துக் கருத்துக்களுக்கும் குறித்த கட்டுரைகளின் ஆசிரியர்களே முழுப்பொறுப்பாளிகள் ஆவர்.

# சிந்தாந்த சைவ சங்கிரகத்தில் முப்பொருள் விளக்க நிலை

சி. ரமணராஜா

**ஆய்வுச் சுருக்கம்**

*சைவம், சித்தாந்தம் என்னும் இருசொற்களின் சேர்க்கையே சைவசித்தாந்தம் ஆகும். சிவத்தொடர்புடைய இத்தத்துவம் சைவர்களின் தனித்துவம் பேணும் முடிந்த முடிபான கோட்பாட்டு விளக்கமாகவுமுள்ளது. காலந்தோறும் தோன்றி வாழ்ந்த அறிஞர்கள் பலரும் இக்கோட்பாட்டுச் செல்நெறியின் தெளிவுறு நிலைக்கு பங்களிப்புச் செய்து வந்துள்ளனர். இந்தியாவில் சைவ சித்தாந்த சிந்தனைகள் கருவாகி முடிவான கோட்பாடாக தருவிக்கப்பட்டுள்ள போதிலும் அதன் செவ்விய தன்மைக்கு பங்களிப்புச் செய்தோரில் ஈழத்தவர்க்கு தனித்த சிறப்பும், தனிப்பெரும் அடையாளமும் உண்டு. 19ஆம், 20ஆம் நூற்றாண்டுச் சைவசித்தாந்தச் செல்நெறி இலங்கையருக்குரியது எனக் கூறத்தக்க வகையில் இலங்கையரின், சைவசித்தாந்தப் புலமையும், அதன் நிலைப்படுத்தலுக்கானதும் அறிவுப் பரம்பலை விரிவுறச் செய்வதற்குமான முன்னெடுப்புகளும் விசாலமான வையாகக் காணப்பட்டன. சைவ சித்தாந்த இருப்பின் நீட்சிக்குப் பங்களித்த ஈழத்து அறிஞர்கள் பலருளர். அவர்களுள் வடகோவை வி.வேலுப்பிள்ளையும் ஒருவர். இவரது சைவ வாழ்வியலும், சைவ நூற்புலமையும், மற்றும் சைவ சித்தாந்த வளர்ச்சிக்கான பங்களிப்புகளும் ஆய்ந்து வெளிவராதிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அவரது சைவ சித்தாந்தப் புலமையின் வெளிப்பாடாக சித்தாந்த சைவ சங்கிரகம் திகழ்கிறது. செய்யுள் நடையிலிருந்த சைவ சித்தாந்தப் பொருண்மையை உரையாடலாக்கி வினாவிடை வடிவில் எளிமைப்படுத்தி மக்கள் மயப்படுத்தும் முயற்சியாக இந்நூல் அமைகிறது. இவ்வகையில் முப்பொருண்மைத் தெளிவுபடுத்தலில் வேலுப்பிள்ளையின் சித்தாந்த சைவ சங்கிரகம் பெறுமிடத்தினை ஆராய இக்கட்டுரை எத்தனிக்கின்றது.*

**திறவுச் சொற்கள் :** வடகோவை வி.வேலுப்பிள்ளை, சித்தாந்த சைவ சங்கிரகம், சைவசித்தாந்தம், முப்பொருள் விளக்கம், ஈழத்து சைவசித்தாந்தச் செல்நெறி.

**அறிமுகம்**

ஈழத்தில் சைவமும், சைவசித்தாந்த தத்துவமும் மேன்மையுற்று விளங்குவதற்கான சூழற்புல உருவாக்கம் ஆறுமுக நாவலர் காலத்தில் தோன்றியதாகும். சைவ சித்தாந்த அறிவை பிரசுரித்தல் மட்டில் நாவலர் பணி அமைந்து விளங்கவில்லை. சைவ சித்தாந்த உணர்வொழுக்க நிலையை ஏற்றுப் பிரதிபலிக்கத் தகுதி பெற்றதாகச் சமூகத்தைப் புனருத்தாரணஞ் செய்வதே அவரது பெருவிருப்பாகவும் அமைந்தது.[1] ஆயினும், திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவருடன் ஈழத்துச் சைவ சித்தாந்த வரலாற்றின் ஆரம்பம் உணரப்படுகின்றது. சைவ சித்தாந்த சாஸ்திரங்களில் நேரடியாக கையிட்டுச் சித்தாந்த விளக்கஞ் செய்த ஈழத்து முதல் அறிஞர் என்னும் மகிமை அவர்க்குளதாகும். முப்பொருள் உண்மை விளக்கத்தெளிவு நிலையை ஏற்படுத்திச் சைவ சித்தாந்த அறிவாராய்ச்சியைப் பரிமளிக்க வைப்பதிற் சிவாகம அறிவின் பங்கெவ்வளவு? அதற்கு முன்னோடியாக வேண்டிய சம்ஸ்கிருத மொழியறிவின் பங்கெவ்வளவு?[2] என்பதைப் பிறருந் தீவிரமாகச் சிந்திக்க வைக்கும் பாங்கில் இவரது சேவை மிகக் கனகாத்திர முள்ளதாகக் கருதப்படுகின்றது.

---

*விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
*ksramanan30@gmail.com*

19ஆம்,20ஆம் நூற்றாண்டுச் சைவசித்தாந்தச் செல்நெறி இலங்கையருக்குரியது எனச்சுட்டி யுரைக்கத்தக்க வகையில் ஈழத்தவரின் சைவசித்தாந்த மெய்யியல் நூற்புலமையும், அதன் ஸ்திரப்படுத்தலுக்கான - அறிவுப் பரம்பலை விருத்தியுறச் செய்வதற்கான முன்னெடுப்புகளும் பரந்திருந்தன.

பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்களின் தோற்றமும் சைவசித்தாந்த தத்துவத்தின் முடிவு தெளிவுபடுத்தப்பட்ட சூழலும் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து வந்த பிற்சூழலில் அவற்றின் புரிதல், அறிதல், தெளியவைத்தல், இலகுவாக்கல், உரை செய்தல், பதிப்பித்தல், விளக்க விருத்திக்கான நூலுருவாக்கல், சித்தாந்தக் கல்வி புகட்டுதல், ஆசிரிய மாணவ உறவு சார் நிலையில் தொடருறுப்பெறச் செய்தல் என்னும் வடிவங்களில் சைவசித்தாந்த தத்துவத்தின் சமூகமயமாக்கற் செயற்பாடு களில் அதிக முன்னீடுபாடும், முனைப்பும் கொண்டிருந்தவர்கள் ஈழத்து அறிஞர்களே என விதந்து குறிப்பிடலாம். சைவ சித்தாந்தக் கோட்பாட்டுருவாக்கத்தின் பிற்சூழல் வரலாற்றை ஆராயப்புகும் போது இவ்விடயம் நன்கு புலனாகும்.

நாவலர் மரபின் நீட்சியாக சைவ சித் தாந்தக் கருத்துக்களை எளிமைப்படுத்தி விளக்கும் முயற்சியில் முன்னின்று செயற்பட்ட ஈழத்தவர்களுள் வேலுப்பிள்ளையும் குறிப் பிடத்தக்கவர். இவர் சைவ சித்தாந்தம் சார்பாக பல்வேறு நூல்களை ஆக்கியுள் ளமையை அறிய முடிகின்றதாயினும் சித்தாந்த சைவ சங்கிரகம் என்னும் இந்நூலே இன்று கிடைக்கப்பெறுகின்றது. சாஸ்திர நூற் கருத்துக்களை வசன நடையில் இலகு படுத்தி முப்பொருள் சார்ந்த கருத்துக்களை தெளிவுபடுத்தும் செயற்பாங்கில் இந்நூல் வகிக்குமிடத்தினை மதிப்பீடு செய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

வேலுப்பிள்ளையின் ஆளுமைப்புலத்தை இனங்காணுதல், நூல் முயற்சிக்கான பின் னணி, முப்பொருண்மை விளக்க நிலையில் கையாண்ட யுக்திகள், ஈழத்துச்சைவ சித்தாந்த வரலாற்றில் சித்தாந்த சைவ சங்கிரகத்தின் வகிபங்கு முதலானவற்றை இனங்கண்டு வெளிக் கொணர்வதே இவ்வாய்வின் பிரதான இலக்காகும். இவ்வாய்வானது சித்தாந்த சைவ சங்கிரகம் மற்றும் பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்கள் முதலானவற்றை முதனிலைத் தரவுகளாகக் கொண்டு, விபரணம், பகுப்பாய்வு முதலிய ஆய்வு முறையியல்களினூடாகக் கட்டமைக்கப்படுகின்றது.

ஈழத்துச் சைவசித்தாந்த மரபினைச் செவ்வி யதாக்கிய ஆளுமைகள் பற்றி வேறுபட்ட தளங்களில் ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ள போதிலும் சிலரைக் குறித்த ஆய்வுகள் வெளிவராதிருப்பதும் உண்டு. வேலுப்பிள்ளை அவர்கள் ஈழத்துச் சைவசித்தாந்த தத்துவ விருத்திக்கு பங்களித்திருப்பினும் அவரைக் குறித்த பார்வைகள், பதிவுகள், ஆய்வுகள் இதுவரை வெளிவராதிருக்கின்றமை சுட்டத் தக்கது. இதனடிப்படையில் சைவ சித்தாந்தப் பொருண்மைகளை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லும் முயற்சியில் அவர் பெறுமிடத்தினை ஆராய்வது அவசியமாகும் என்ற நியாயித்தலின் அடிப்படையில் இவ்வாய்வு இங்கு முக்கியம் பெறுகின்றது.

**நூலாசிரியர்**

இந்நூலை ஆக்கியவர் வடகோவை விநாசிதம்பி வேலுப்பிள்ளை என்பார். இவர் ஈழத்துச் சைவ சித்தாந்த ஆளுமைகளில் ஒருவர். சைவ வாழ்வு வாழ்ந்தவர். மெய்கண்ட சாஸ்திரங்களில் புலமை உடையவர். பல நூல்களுக்கு ஆசிரியராக விளங்குபவர். திண்ணைக்கல்வி முறையில் கல்வி புகட்டியவர்.

நாவலர் பரம்பரையினரும், புலவர்கள், அறிஞர்கள், புரவலர்கள் ஆகியோரும் ஆற்றிய அருந்தவப் பணியினாலேயே இன்னமும் ஈழத்தில் சைவ சித்தாந்த விருட்சம் நிலைபேறுடையதாக நின்று நிழல் தருகின்றது. அதற்கு ஆதாரமாயிருந்தவர்களில் ஒருவராக பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலுமாகச் சுமார் அரை நூற்றாண்டு வாழ்வியலைக் கொண்ட விநாசித்தம்பி வேலுப்பிள்ளை விளங்கினார். இவர் நாவலர் சமயப் பரம்பரையினர், தமிழ் இலக்கண - இலக்கியங்களுடன் நிகண்டையும் செம்மை யுறக் கற்றறிந்தவர், சைவ சமய சாஸ்திரங்களில் விற்பன்னர், திருவாவடுதுறை ஆதீனஞ் சென்று சிறார்களுக்காகப் பலவாண்டுகள் திண்ணைப் பள்ளிக் கூடத்தினை நடத்தி யவர், ஆசார சீலத்துடன் விபூதியும், உருத்திராக்கமும் அணிந்து, பஞ்சகச்சம் தரித்த பான்மையினர், சைவசித்தாந்த நூல் களை எழுதி வெளியிட்டவர்.[3] என அவரின் சைவ வாழ்வியலின் அடையாளம் துணி யப்படுகின்றது. இவரது வரலாற்றைப் போலவே இவர் எழுதிய நூல்களும் பெரிதாக அறியுமாறில்லை. ஆயினும் அவற்றைத் தேடிப்பெற்று மீளளிப்புச் செய்யும் முயற் சியிலுள்ளவர்களுள் இவரது பேரன் முறையுடையவரான ஆறு திருமுருகன் குறிப் பிடத்தக்கவர். அரிதின் முயன்ற இவர் சித்தாந்த சைவ சங்கிரகம் என்னும் நூலினைப் பெற்று 115 ஆண்டுகளின் பின்னர் மீள்பதிப்புச் செய்துள்ளார். ‘முப்பானூற் சருக்கம்’ அவரது புலமைத்துவத்தின் இன்னொரு வெளிப்பாடு. இலங்கை அறிஞர்களுள் திருக்குறளுக்கு முதன் முதல் சிறந்த பொழிப்புரை எழுதி ‘முப்பானூற் சருக்கம்’ என்ற பெயரில் வெளியிட்டவர் இவரே என அறியப்படுகிறது. இவரது திருத்தில்லை நிரோட்டக யமக வந்தாதி (1891) ஈழத்திலும் தமிழகத்திலும் கிடைக்கப் பெற்றிலது. ஆயினும் 15 பக்கங்களைக் கொண்ட இந்நூல் பிரித்தானிய நூதனசாலையில் இருப்பதனை அறிந்து கொண்டு, மிக்க பிரயத்தனத்தினால் நூலினைப் பெற்று மீள் அச்சேற்றி வெளியிட்டுள்ளார் ஞானம் பாலச்சந்திரன் அவர்கள். ஈழத்தில் கிடைக்கப்பெறும் அதிபழைய நிரோட்டக நூ லாக இந்நூலமைகின்றது என்ற கருத்து அந்நூ லின் முக்கியத்துவத்தை விளக்கும் எனலாம்.[4]

**நூலுருவாக்கப் பின்னணி**

சித்தாந்த நூல்கள் மிகவும் அரிய பெரிய கருத்துக்களை கொண்டமைந்தவை. இவை செய்யுள் வடிவமாக அமைந்ததன் காரணத்தினால் இலகுவில் விளங்கிக் கொள்ளவியலாத சூத்திரங்களாக இலங் கின. ஆகவே, இவற்றை ஆசிரியரின்றி - உரையின்றி - உரையின் துணையின்றிக் கற்பது இலகுவானதாக இருக்கவில்லை. இதனால் சித்தாந்தக் கருத்துக்களை இலகுவாக மக்களிடத்தே எடுத்துச் செல்வதற்கு - சொல்வதற்கான எளிய முயற்சிகள் காலந் தோறும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதன் விளைவாக சாஸ்திர நூல்களுக்கு வெவ்வேறுரைகள் வெவ்வேறு சிந்தனைப் புலத்தில் எழுதப்பட்டு அச்சேற்றம் பெற்றன. சொற்பொழிவுகளாக, பிரசங்கங்களாக, பேச்சுக்களாக, கண்டனங்களாக, தர்க்கங்க ளாக, விரிவுரைகளாக, விளக்கவுரைகளாக, சுருக்கக் குறிப்புகளாக, வினா விடைகளாக வடிவ மாற்றம் பெற்று சமூகத்தளத்திற்கு கொண்டு செல்லும் சரித்திர முயற்சிகள் தொடருறுப்பெற்று வந்தன.

உண்மைப் பொருட்களை மக்கள் அறிந்துணர வேண்டுமெனும் பெருவிருப் புடையோராயிருந்து செய்யுளிலக்கியங்களை வசன நடைக்கு கொணர்ந்து சேர்ப்பித்த நாவலர் வழியில் நின்று இந்நூலாசிரியரும் சித்தாந்த சாஸ்திரங்கள் பத்திய ரூபமாக இருத்தலின் விளைவையுணர்ந்து கத்திய ரூபத்திற்கு

வடிவமாற்றம் கொடுத்தார். இச்சிந்தனைப் பரம்பலின் வெளிப்பாடாக விளைந்ததே சித்தாந்த சைவ சங்கிரகம். சைவசித்தாந்தம் ஆராயும் முப்பொருட்களை அவற்றின் இருப்பு, இலக்கணம், இயல்புகள், இலக்குகள், சாதனங்கள், அளவைகள் தொடர்பாக எளிமைப்படுத்தி விளக்கும் முயற்சியாகவும், அறிவார்ந்த செயலாகவும் இந்நூன் முயற்சியைக் கருதலாம். இதனடிப்படையில் நூலாசிரியர்,

"செய்யுநடையிற் செய்யப்பட்ட அந்நூல்களும் அவற்றின் உரை களும் சற்றுணர்வுடையராயி னார்க் கன்றி ஏனையோர்க்கு தெற்றெனப் புலப்படாவாகலின் அவற்றைச் சுருக்கி விளக்கிச் சித்தாந்த சைவ சங்கிரகம் எனப் பெயர்தந்து இந்நூலைத் தமியேன் வசன நடையில் ஆசிரியன் மாணாக்கற் கோதுமாறறின் இயற்று வேனாயினேன்"[5] என இந்நூலின் தோற்றத்திற்கான பின்புலத்தை விபரித்திருப்பதும்,

"இது சைவ சமயிகள் யாவர்க்கும் பயன்பட வேண்டும்"[6]

என்று அதன் பயனை வெளிப்படுத்தியிருப்பதும்,

"வேதாகமங்களில் வல்ல பண்டிதர்கள், நீ இது செய்தற்கு அதிகாரியா? என்று என்மேற் கோபஞ் செய்யாது இதில் ஒவ்வாதன காணப்படின் நேரே அவற்றை எனக்கு அறிவிக்கும்படி பிரார்த்திக்கின்றேன்."[7]

என்று கூறியிருப்பதும் அவரது பணிவுடைமையின் வெளிப்பாடுகளேயாம். இதுவே சைவ சித்தாந்த வாழ்வியலுமாகும்.

**நூற்கட்டமைப்பும் சிறப்பும்**

சம், கிரஹ என்னும் இரு வடசொற்களின் சேர்க்கையே சங்(ம்)கிரக என்பதாகும். ஒன்றாகப் பெற்றுக் கொள்ளுதல், நன்றாகச் சேகரித்தல் என்பது இதன் பொருளாயினும் சேகரிக்கப்பட்ட விடயங்கள் மிகவும் சுருங்கக் கூறி விபரிப்பதாகவே அமையும். ஆகவே சைவ சித்தாந்தக் கருத்துக்களை நன்றாகச் சேகரித்து தொகுத்தளிக்கப்பட்ட நூலே சித்தாந்த சைவ சங்கிரகம் எனச்சுட்டியுரைக்கலாம். வடமொழிச்சிவஞான போதத்திற்கு சிவாக்கிரக யோகிகளால் எழுதப்பட்ட சிற்றுரை சிவ ஞான போத சங்கிரக வியாக்கியானம் என அழைக்கப்படுவதும் இங்கு சுட்டத்தக்கது. ஆகவே சங்கிரகம் என்பது விடயதானச் சுருக்கமே எனவுரைக்கலாம். சங்கிரகம் என்னும் பெயரில் தமிழகத்திலும், ஈழத்திலும் தமிழிலும் வடமொழியிலுமாகப் பல நூல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் (அரதத்த சிவாசாரியார்), சிவாகம அதிமான்ய சங்கிரகம் (ஞானப்பிரகாச முனிவர்), பதார்த்த தர்ம சங்கிரகம் (பிரசாஸ்தபாதர்), சைவ நூற்சார சங்கிரகம் (சுவாமிநாத பண்டிதர்), சதரத்தின சங்கிரகம் (உமாபதி சிவாசாரியார்), சைவ சித்தாந்த சங்கிரகம் (வ.கார்த்திகேயபிள்ளை), பாரத தாற்பரிய சங்கிரகம் (அப்பையதீட்சிதர்), சம்ஸ்கிருத இலக்கணச் சுருக்கமாகிய சத்த சங்கிரகம் (சிவசங்கர பண்டிதர்) முதலியன நுவலத்தக்கன. இவற்றுள் சதுர்வேத தாற்பரிய சங்கிரகம், பாரத தாற்பரிய சங்கிரகம் முதலிய வடமொழி நூல்கள் சபாபதி நாவலரால் தமிழ்ப் பெயர்ப்புச் செய்யப்பட்டிருக்கின்றமை குறிப்பிடற்குரியது.

சைவ சித்தாந்தப் பொருண்மைகளை எடுத்துரைப்புச் செய்கின்ற ஞானாமிர்த நூற்பாடல்கள் சிலவும், இருபா இருபஃதும் வினாவிடைப் பாங்கில் அமைந்திருப்பதும், வினாவெண்பா, உண்மை விளக்கம் முதலியன ஆசிரிய - மாணவ உறவினடியாக கருத்துக்களை வெளிப்படுத்தியிருப்பதும் இங்கு சுட்டியுரைக்கத்தக்கது. இந்நூலாசிரியர் சாஸ்திரக் கருத்துக்களை, செய்யுள் வடிவிலே எடுத்துக் கூறாமல் தனது மொழிநடையில் அவை எந்த நூல்களிலிருந்து பெறப்பட்டன

என்ற சுவடுகள் கூடத்தெரியாத வகையில் ஆசிரிய மாணவ உறவினடியாக வினாவிடை அமைப்பில்முப்பொருள்பற்றிய சந்தேகங்களை வெளிக்கொணர்ந்து அக்காலத்துக்கேயுரிய வகையில் கருத்துக்கள் விளக்கமுறச் செய்யப் பட்டமை சிறப்பான யுக்தியாகும். வேதாந்த மாகிய உபநிடதக் கருத்துக்கள் விளக்கப்பட்ட யுக்தியின் ஒரு கூறான 'வினாவிடை' முறை யியலையே இந்நூலாசிரியரும் கையாண் டுள்ளமையைக் காணலாம். ஆறுமுக நாவலர் சைவவினா விடையில் சமய, தத்துவக் கருத்துக்களை விளக்கியிருப்பினும் ஆசிரிய - மாணவ உறவினடியாக விளக்கும் யுக்தியைக் கையாளவில்லை. ஆனால் நாவலரின் சைவ வினா விடையின் செல்வாக்கினை சித்தாந்த சைவ சங்கிரகத்தில் பலவாறு உணரலாம். ஆயினும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் வேறுபட்ட வடிவங்களில் விபரிக்கப்பட்டு வந்துள்ள போதும் இதுபோன்ற யுக்திகள் கையாளப்படுவது இதுவே முதல்முறை எனத்துணியலாம். ஆகவே ஈழத்தில் சித்தாந்த விருத்திக்கு இந்நூல் புதுவரவே ஆகும்.

இங்கு ஒவ்வொரு வினாக்களும் நேர்த்தி யாக வடிவமைக்கப்பட்டு விளக்கம் அளிக் கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். ஆசிரிய, மாணவ உரையாடலில் மாணவனே வினாக் களை எழுப்புமாறன்றி இருவரும் சந்தேக வினாக்களை எழுப்புவதும், மாறிமாறிக் கருத்துரைப்பதும் யார் மாணாக்கன், யார் ஆசிரியர்என்றஐயுறவுநிலையைகற்பவர்மனதில் ஏற்படுத்தும் தன்மையில் நூலமைந்துள்ளது. இங்குள்ள வினாக்கட்டமைப்பும் விளக்க மளிக்கும் பாங்கும் நூலாசிரியரது சித்தாந்த அறிவுசார் புலமைத்துவ ஆளுமையினை எடுத்துக்காட்டுகிறது.

இந்நூலானது பொதுவியல், சிறப்பியல் எனும் இருபகுதிகளாகக் கட்டமைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் அறு வகைத் தலைப்புகளிடப்பட்டு முழுமை யாக பன்னிரு உபதலைப்புகளுடன் இந்நூ லமைந்துள்ளது. சிவஞான போதமும் பொதுவியல், சிறப்பியல் எனும் இரு பகுதியில் பன்னிரு சூத்திரங்களில் முப்பொருண்மையை விளக்கியுள்ளது. பொதுவியலில் பசுவுண்மை, பாசவுண்மை, பதியுண்மை, அநாதி நித்தியப் பொருள், பாச நீக்கம், சமயம் ஆகிய தலைப் புகளிலும், சிறப்பியலில், அளவை, சுருதி, பதி, பாசம், பசு, முத்தி ஆகிய தலைப்புகளிலும் கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன. பொது வியலில் முப்பொருளுண்மையும் சிறப்பியலில் அவற்றின் இலக்கணம் மற்றும் இயல்புகளும் விளக்கப்பட்டுள்ளன. இவற்றைப் படிக்கின்ற போது மெய்கண்ட சாஸ்திர நூல்களில் ஒன்றைப் படிக்கிறோம் என்ற மன உணர்வே மீதூர்ந்து நிற்கிறது.

இந்நூற்கட்டமைப்பினூடாக இதன்சிறப்பு நிலையை கீழ்வருமாறு இனங்காண முடிகிறது. இந்நூலில் பன்னிரு பகுதிகளிலும் கூறப்பட்ட கருத்துக்கள் சைவ சித்தாந்த சிந்தனைகளை - மெய்கண்ட சாஸ்திர நூற்கருத்துக்களை சுருங்க விளக்குவதாக உள்ளது. தாம் எடுத்துக்கொண்ட பொருண்மையை விளக்க பல்வேறு எடுத்துக்காட்டுக்கள், உவமை மற்றும் உருவகங்களை ஆசிரியர் கையாண் டிருக்கின்றார். கற்போர் எளிமையாக விளங்கிக் கொள்ளும்வகையினவாக கருத்துக்கள் அமைய வேண்டுமென்ற மனோநிலை ஆசிரியரிடத்து புலப்படுகின்றது. உபநிடதங்களில் கருத் துக்கள் வெளிப்படுத்தப்பட்டிருப்பது போன்று ஆசிரிய - மாணவ சம்பாசனைகள் மூலம் கருத்துக்கள் விபரிக்கப்பட்டுள்ளன. ஆசிரிய - மாணவ சம்பாசனையில் இருவரும் வினாக்களை உருவாக்கி விடையளிக்கும் செயற்பாங்கு சிறப்பானது. செய்யுள் நடை யிலிருந்த கருத்துக்கள் வசன நடைக்கு வடிவ மாற்றம் செய்யப்பட்டிருக்கின்றன. சைவ சித்தாந்தச் செல்நெறியில் புதிய வடிவமாகவும்

புதிய முயற்சியாகவும் காணப்படுகின்றது. மேலும், உயர் ஞான தத்துவ உரையாடல், சுருங்கச் சொல்லி விளக்கமளித்தல், அதிபக்குவ சீடனுக்கும் குருவுக்கும் இடையிலான அறிவுப்பகிர்வு, வடமொழிச் சொற்களின் பயன்பாடு, அக்காலத்துக்கு உரிய மொழிக் கையாளுகை முதலியனவும் இந் நூலில் காணலாகும் விசேட அம்சங்களாகும்.

சைவசித்தாந்தம் முப்பொருட்களை பதி(கடவுள்), பசு (உயிர்), பாசம் (உலகம்) எனும் ஒழுங்கிலே விளக்கி நிற்கிறது. திருமந்திரம் 'பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில் பதியினைப் போல் பசு பாசம் அநாதி'[8] எனும் ஒழுங்கில் கூற, அதையே பின் வந்த சாஸ்திர நூல்களும் ஏற்றுரைத்தன. சான்றாக, 'பதி பசு பாசம் தெரித்தல் பதிபரமே'[9] என வருதலாலறியலாம். மெய்கண்ட சாஸ்திரங்களுக்கு முன்னெழுந்து சைவ சித்தாந்த மரபுக்கு முதனூலாக விளங்குகின்ற ஞானாமிர்தம் பசு, பாசம், பதி எனும் ஒழுங்கில் முப்பொருண்மையை ஒழுங்குபடுத்தியிருப்பினும், முப்பொருட்களும் நித்தியம் எனக் கூறப்புகுந்த நிலையில் பிறிதோரிடத்தில் பதி, பசு, பாசம் எனும் ஒழுங்கில் எடுத்தாண்டுள்ளது. இதனை 'பதி பசு பாச மதியோர் வரத..'[10] என வருதலாலறியலாம். சித்தாந்த சைவ சங்கிரகமும் ஞானாமிர்தம் கூறியது போன்று பசு, பாசம், பதி எனும் ஒழுங்கில் முப்பொருளுண்மையை விளக்கி நிற்பது குறிப்பிடத்தக்கது.

**பசுவுண்மை**

ஆன்மா நித்தியமானது, மலப்பீடிப்புடையது, எண்ணரிதானது, சிற்றறிவுடையது, சார்புடையது, வினைகளையாற்றுவது எனப் பல்லியல்புகளோடு கூடியதாக சைவ சித்தாந்தம் ஆன்மா பற்றிக் கூறும். சான்றாக,

"அறிவிலன் அமூர்த்தன் நித்தன் அகராதி
குணங்களோடும்
கேவலத்தில் ஆன்மா"[11] என சிவஞான சித்தியாரும்,

"எண்ணரிதாய் நித்தமாய் இருண்மலத்திலழுத்தி
இருவினையின் தன்மைகளுக் கீடான யாக்கை-
நல் பசுவர்க்கம் எனவுரைப்பர் உணர்ந்தே"[12]

என சிவப் பிரகாசமும் நுவல்கின்றன. பசுவுண்மையை சித்தாந்த சைவ சங்கிரகம் பின் வருமாறு எடுத்தாள்கிறது. சீவிக்கின்ற சரீரம் ஆன்மாவுடைய பிராணவாயு அடங்குதல் விடுதல் செய்தலுடமையான் யாது ஆன்மாவுடையதன்று. அது பிராணவாயு அடங்குதல் விடுதல் செய்தலுடையதன்று சித்திரப்பாவை போல, எனவும், மானுட சரீரம் ஆன்மாவுடையது அறிவிக்க அறிதலுடைமையான் யாது ஆன்மாவுடையதன்று அது அறிவிக்க அறிதலுடையதுமன்று சகடம் போல. எனவும் கேவலவியதிரேகி அனுமானத்தினால் பசுவினுண்மையினை நூலாசிரியர் நிச்சயிக்கின்றார்.[13]

பசுவுண்மை சார்ந்த உரையாடலில் ஆசிரியன் - மாணாக்கன் ஆகியோர் தேகான்ம வாதி, பிராணான்ம வாதி, இந்திரியான்ம வாதி, சூக்கும் தேகான்ம வாதி, அந்தக்கரணான்ம வாதி முதலியோர் ஆன்மா பற்றிக் கூறிய கருத்துக்களை ஒவ்வொன்றாக மறுத்து, அவற்றுக்கு வேறாக உள்ள அறிவுடைப் பொருளே ஆன்மா எனத்துணிய முற்படுகின்றனர். சான்றாக,

மா. மெய் வாய் கண் மூக்கு செவியென்னும் ஐம்பொறிகளுமே அறியும். உறக்கத்தின் கண் ஒடுங்கியிருக்கும்.

ஆ. நனவின்கண் அவையறிவதும் ஒவ்வொரு பொறியாயறிவதன்றி ஒருங்கே அறிவனவல்ல. ஒன்று அறிந்ததை ஒன்று அறியமாட்டாது. கண் உருவத்தை அறியும். செவி ஓசையை அறியுமென இவ்வாறு உணர்தலை உடையதோர் பொருளுளதேயாம்.

ஆகலின் இவ்வைந்தின் தொழிற்பாட்டையும் அறிந்து அவற்றின் பயன் கொள்வதாயுளதே அவ்வறிவுடைப் பொருளாம். அல்லதூஉம், நனவின்கட் கனவு கண்டாமென்றும் கண்டில மென்றும் நிற்பது ஒன்றுளது ஆகலானும், அறிவிக்க அறிதலா னும் இவ்வுடம்பினுள்ளே அறிவுடைப்பொருளொன்று உளதேயாம். எனதுடம்பினுள் அறிவுடைப் பொருளொன்று உண்டோ இல்லையோ என வினவிய விடத்து இல்லையென்று சொல்லுமதுவே அவ்வறிவுடைப் பொருளாம். எனது உடம்பு என்னுமிடத்தும் அறிவுடைப் பொருள் உடம்பன்று பிறிதொன்றாம் என்பது பெறப் படும்.[14] இவ்வாறு வரும் உரையாடல் சிவஞான போத மூன்றாஞ் சூத்திரம்[15] கூறும் கருத்தினைச் சிறு வினாக்களாக்கி விளக்குவதாகவுள்ளது.

மா. உடம்பகத்துயிர் உருவமாய் நிற்கும் அதன் இலக்கணம் யாது?

ஆ. ஆன்மாக்கள் அருவமாய் அநாதி நித்தியமாய் வியாபகமாய்ச் சேதனமாய் அநாதி ஆணவத்தால் மறைப்புண்டு கிடப்பனவாய்ச் சிற்றறிவு முதலிய குணங்களை உடையனவாய் எண்ணிறைந்தனவா யுள்ளனவாம்.[16]

மா. ஆன்மாக்கள் எவ்வாறு பகுக்கப்படுவர்?

ஆ. அவர்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவகையாகப் பகுக்கப்படுவர். விஞ்ஞானகலர் ஆணவமல மாத்திரமுடையர். பிரளயாகலர் அதனோடு கன்ம மலமு முடையவர். சகலர் அவற்றோடு மாயாமல முமுடையர், அவ்வான்மாக்களுள் அதிபக்கு வமாயினோர் பாசத்தின் நீங்கப் பாசவாசனை மாத்திரம் நீங்காமல் அபரமுத்தராய்ப் பதியின் ஆஞ்ஞையினால் அதிகாரகிருத்தியஞ் செய்துகொண்டிருப்பர். ஏனையோர் பிறந் திறந்துழல்வர்.[17]

மா. ஆன்மா எய்தும் அவத்தைகள் எவை?

ஆ. அவைதாம் கேவலம், சகலம், சுத்தம் எனும் மூன்றுமேயாம். ஆணவ மலமாத்திரத் தோடிருத்தலே கேவலா வத்தையாம். பின் மாயா தனு முதலியவற் றைப் பெறுதல் சகலாவத்தையாம். ஆணவம் முதலிய அவற்றையெல்லாம் நீங்குதல் சுத்தாவத்தையாம்.[18] மேற்படி உரையாடலுக்குரிய மூலக்கருத்துக்கள்,

"இப்பசுவர்க்கம் உணரின் மூன்றாம்
உயரும் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர்
நிரையின்மலம் மலங்கன்மம் மலங்கன்ம
மாயை நிற்கும்..."[19]

"...பலவுயிர்கள் மூன்றவத்தை பற்றி
உற்றிடுங்கே வலசகல சுத்தமென உணர்க..."[20]

"திரிமலத்தார் ஒன்றதனில் சென்றார்களன்றி
ஒருமலத்தாராயும் உள்"[21]

எனவரும் சாஸ்திர நூற்கருத்துக்களாலும்,

"பசுபா சத்தோடு பதியாய் பெற்றி
மதியோர் பசு மூவகையென மதிப்பர் பன்னில்
கேவலன் சகலன் இன்னியல் சுத்தன்.."[22]

என ஞானாமிர்தம் கூறும் கருத்தினாலும் அறியலாம்.

மா. பூமியிலே பிறந்த ஆன்மாக்கள் சரீரத்தை விட்டவுடனே யாது செய்யும்?

ஆ. நல்வினை செய்த ஆன்மாக்கள் தூல சரீரத்தை விட்டவுடனே சூக்கும சரீரத்தோடு பூதசார சரீரமாகிய தேவசரீரத்தை எடுத்துக் கொண்டு சுவர்க்கத்திலே போய் அந்நல்வினைப் பயனாகிய இன்பத்தை அனுபவிக்கும். தீவினைசெய்த ஆன்மாக்கள் தூலசரீரத்தை விட்டவுடனே சூக்கும சரீரத் தோடு பூதசரீரமாகிய யாதனா சரீரத்தை எடுத்துக்கொண்டு நரகத்திலே போய் அத்தீவினைப் பயனாகிய துன்பத்தை அனு பவிக்கும். இப்படியன்றி ஒரு தூலசரீரத்தை விட்டவுடனே பூமியிலே தானே மற்றொரு தூல சரீரத்தை எடுப்பதுமுண்டு.[23]

இச்சிந்தனையை சிவஞானசித்தியார்[24]

தெளிவாக எடுத்துரைத்திருக்கின்றது. மேலும், ஆன்மாக்களோடு தொடர்பான வகையிலே இருவகைச் சரீரம், அவத்தைகள், சுவர்க்க நரகங்கள், இருவினைகள், இருவினைப் பயன்கள், பாசச்சேதம், முத்தி மற்றும் சாதனங் கள், குருவின் உபதேசம், முத்தி நிலையில் ஆன்மாவினது தன்மை முதலியன பற்றியும் சுருங்கக் கூறித் தெளிவுபடுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பாசவுண்மை**

பாசங்கள் ஆன்மாக்களைப் பந்திந்து நிற்பன. ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று அசித்துப் பொருட்களும் ஆன்மாக்களைப் பந்தித்திருக்கும் பாசங்களேயாகும். இம் மூன்றோடு மாயேயம், திரோதாயி என்னு மிரண்டையும் சேர்த்து பாசம் ஐந்தெனக் கொள்வது மரபாகவுள்ளது. இவை அசித்துப் பொருட்களாகும். இவ்வுலகப் பொருட் களெல்லாம் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென ஐவகைப்படும். இப்பஞ்ச பூதங்களும் அசித்துப் பொருட்களேயாகும் எனப்பாசம் பற்றிச் சைவசித்தாந்தம் எடுத்துரைக்கும்.

மா. பஞ்சபூதங்களுக்கு முதற்காரணந் தான் யாது?

ஆ. அணுவே காரணமெனின் அதுவும் அவயமுடைத்து ஆகலின் அழிதன் மாலைத்து. ஆகவே அவயமில்லாத நிலைபேறுடையதெதுவோ அதுவே காரண மாகும். அங்ஙனம் காரணமாயிருக்கும் அதுவே மாயை.[25]

பஞ்சபூதங்களின் சேர்க்கையினாலான பிரபஞ்சத் தோற்றத்திற்கு மாயையே முதற்காரணம் என்பது சித்தாந்திகளின் துணிபாகும். இதனை,

"தேரின் மண் மாயையாக திரிகைதன் சக்தியாக

ஆரியன் குலாலனாய் நின்றாக்குவன் அகிலமெலாம்"[26] என்கிறது சிவஞான சித்தியார். பிரபஞ்சம் அடங்கலும் தோற்று கைக்கு உற்பத்தித் தானமாயிருப்பது மாயையே என்பதனை ஞானாமிர்தக் கருத்தா லுமறியலாம்.[27]

மா. நாம் இன்பதுன்பமாகிய இரண்டை யும் ஒருங்கே அனுபவிக்கின்றோம். ஆன்மா இங்ஙனம் அனுபவித்தற்குக் காரணந்தான் யாது?

ஆ. ஒரு பொருட்டுத் தம்முண் மாறுபட்டு இரண்டு தன்மை காரணத்தானன்றி உளவாகா. ஆகலின் இங்ஙனம் அனுபவித்தற்குக் காரணம் இருத்தல் வேண்டும். நன்மையைச் செய்தவர் இன்பத்தையும் தீமையைச் செய்தவர் துன்பத்தையும் அனுபவித்தலைக் கண்டாம் ஆகலின் அவற்றுக்கு அவையே காரணமாம். அக்காரணம் கன்மம் எனப்படும். ஆணவம் கன்மம், மாயை என்னும் மூன்று அசித்துப் பொருட்களும் ஆன்மாக்களைப் பந்தித்திருக்கும் பாசமாம்.[28] இவ்வாறு அன்னுவயவெதிரேகி, கேவலவெதிரேகி அனுமானங்களினூடாக பாசநிச்சயம் நிறுவப்பட்டுள்ளது.

மா. சித்துப் பொருளாகிய ஆன்மாவும் சடப்பொருளாகிய மாயையின் காரியமா யுள்ள எனதுடம்பும் இங்ஙனமே சம்பந்தப்பட் டதற்குக் காரணந்தான் யாது?

ஆ. சடப்பொருளோடு சம்பந்தப்படு தற்கேற்ற தன்மை சித்துப்பொருண்மாட்டு இருப்புழிச் சம்பந்தப்படுமே அன்றி அல்லுழிச் சம்பந்தப்பட மாட்டாது. சடமுஞ்சித்தும் ஒன்றற் கொன்று மறுதலையாயுள்ளன. ஆகலின் சம்பந்தப்படுந்தன்மை இன்றாம். அவை தாம் அநாதியே விட்டு நீங்காது சம்பந்தப்பட்டிருத்தல் வேண்டும்.. ஆகலிற் பிறிதொரு சடப்பொருளே அநாதியே சம்பந்

தப்பட்டுள்ளது என்பது தானே போதரும். அங்ஙனஞ் சம்பந்தப்பட்டுள்ள சடப்பொருளே ஆணவம்.[29]

மா. ஆணவமாவது யாது?

ஆ. அதுதான் ஒன்றேயாய் எண்ணிறைந்த சக்திகளால் எண்ணிறந்த ஆன்மாக்களில் அநாதியே கலந்து நிற்பதாய் அவைகளுடைய அறிவையுந்தொழிலையும்மறைத்து அஞ்ஞான நிகழ்ச்சிக்குக் காரணமாய் போகத்தை அனுபவிததற்கு கருத்தாவாந் தன்மையை உடையதாய் அகண்ட நித்திய வியாபக சத்தாய் சடமாயிருப்பதுவே.[30]

மா. கன்மமாவன யாவை?

ஆ. அவை ஆன்மாக்கள் மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலே செய்த புண்ணிய பாவங்களே. இவை எடுத்த பிறப்பிலே செய்யப்பட்ட பொழுது ஆகாமியம் எனப்பெயர் பெறும். பிறவிதோறும் ஈட்டப்பட்டு பக்குவப்படும் வரையும் மாயையிலேகிடக்கும் பொழுது சஞ்சிதம் எனப்பெயர் பெறும். இச்சஞ்சித கன்மங்களுள்ளே பக்குவப் பட்டவை மேல் எடுக்குமுடம்பையும் அது கொண்டனுபவிக்கப்படும் இன்ப துன்பங்களையுந்தந்து பயன்படும் பொழுது பிராரித்துவம் எனப்பெயர் பெறும். கன்மம் சொற்பொருள் செய்கை அஃதீண்டுச் செய்கையால் வரும்பயனின் மேற்று.[31]

மா. மாயையாவது யாது?

ஆ. அதுதான் ஆன்மாக்களுக்கு உடம்பு மனம் முதலிய கரணம் பூமியோகம் ஆகிய இவைகள் தோற்றுதற்கு முதற்காரணமாய் நித்தியமாய் அருவமாய் வியாபகமாய் கடவுளுக்கு ஓர்சக்தியாய்ச்சடமாய் மயக்கமுஞ் செய்வதாயிருப்பதுவே.[32] சாஸ்திரநூல்களும் மேற்படி கருத்துக்ளை விளக்கி யிருக்கின்றமை காணத்தக்கது.[33] இவ்வாறு மாயையின் வகைகள், அவற்றின் இயல்புகள், முப்பத்தாறு தத்துவங்கள், அவற்றிற்கான விளக்கங்கள், இருவினைகளின் இயல்புகள் முதலியன பற்றிய விளக்கங்களில் ஆசிரிய மாணவ சம்பாசனை நீண்டு செல்கிறது.

**பதியுண்மை**

பசு, பாசவுண்மை விளக்கி மூன்றாம் நிலையிலே பதியுண்மை விளக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சைவச் சுருதியிலே கூறப்படும் பதி, சிவம் என்னும் பெயருடைத்தது. வேதத்தில் அப்பதிக்குப் 'பிரமம்' என்னும் பெயர் வழங்கப்படும்.[34] பகவற்சத்தத்தாற் குறிக்கப்படும் பொருள் ஸ்ரீசிவபெருமானேயென்பது ஸ்ரீஅரதத்தா சாரியாரால் சதுர்வேத தாற்பரிய சங்கிரகத்தில் வச்ரலேபஞ் செய்யப்பட்டது.[35]

பதி அருபியாதலால் பிரத்தியட்சப் பிர மாணத்தால் அறிதலரிது. ஆகம அளவையால் ஒருவாறறியப்படும். பதியினது உண்மையை இங்ஙனே அனுமானப் பிரமாணங்கொண்டு நிச்சயிக்கலாம். எங்ஙனம்? உலகொரு கர்த்தாவையுடைத்து காரியமாகலின் யாது காரியம் அது கர்த்தாவையுடைத்து குடம் போல, சடமாகிய உலகம் ஒரு கருத்தாவாற் செலுத்தப்படுகின்றது சடமாகிப் பயன்படு தலின், யாது பயன்படுகிறது அது கருத்தாவாற் செலுத்தப்படுகின்றது. தச்சனாற் கட்டப்பட்டு நிழலைச் செய்யும் வீடுபோல.[36] என கேவலான்னுவயி அனுமானத்தினூடாக பதியினுண்மை துணியப்படுகிறது.

ஆ. ...இந்த அதிவிசித்திரமான வீடு தானே தோன்றிற்றா? உலகின்கண்ணே தோன்றிற்றா?....தோன்றி நின்றழிவனவெல்லாம் காரியம். உடம்புத் தோன்றி நின்றழிவது. ஆகலினது காரியம். காரியத்துக்கு நிமித்த காரணம் இன்றியமையாதது. ஆகவே உடம்பைத் தோற்றுவிக்க ஒரு நிமித்த காரணன் வேண்டப்படும்.[37]

இங்கு ஒரு காரியத்திற்கு முதற்காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம் என முக்காரணங்களுண்டு. குடம் என்னும் காரியத்திற்கு மண் முதற் காரணம் தண்ட சக்கரம் துணைக் காரணம் குயவன் நிமித்த காரணம் ஆவது போல, உலகமாகிய காரியத்திற்கு மாயை முதற்காரணம், கடவுளது ஆற்றல் துணைக்காரணம் கடவுள் நிமித்த காரணமாகின்றன. இவற்றால், காரியப் பொருட்களுக்கு கருத்தா இன்றியமையாமை என்பதும், பேரறிவுப் பொருளாகிய இறைவனே உலகத் தோற்றத்துக்கு இன்றியமையாது வேண்டப்படும் கருத்தா என்பதும், உலகிற்கு கருத்தா ஒருவனேயன்றிப் பலரில்லை என்பதும்,உலகம்முத்தொழில்களையுடைது என்பதும் தெளிவாகின்றது.[38] முத்தொழில் என்பது தோன்றல், நிற்றல், அழிதல் என்னும் மூன்று நிலைகளாகும். இதனை விளக்க மெய்கண்டார் அவயப்பகுப்பு, சடமாயும் பலவாயும் இருத்தல், சுட்டியுணர்தல் ஆகிய மூன்று ஏதுக்களைக் கூறுகின்றார். இவ் வகையில் கருவி கரணங்களாலறியப்படும் பொருள்களனைத்தும் தோன்றி நின்று அழியக்கூடியன என்பது தெளிவாகும். இவற்றையே 'அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்' [39] என்றும், 'ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம்',[40] என்றும், 'ஒருவனோடொருத்தி யென்றுரைத்திடும் உலகமெலாம்'[41] என்றும், 'உலகமெலாம் ஒருவனோ டொருத்தி ஒன்றென்று உளதாகி'[42] என்றும் சாஸ்திர நூல்கள் நுவன்றிருக்கின்றன.

அவ்வாறே ஞானாமிர்தமும் பதியை அறியும் உபாயத்தினை அருளிச் செய்ய வேண்டும் என விண்ணப்பம் செய்த சீடனுக்கு கேவலான்னுவய அனுமானப் பிரமாணத்தின் மூலம் பதியுண்மையினை செப்பிநிக்கின்றது.[43]

மா. சிவனுடைய இயல்பு யாது?

ஆ. தானே தனித்தும் ஏனைய உயிரோடும் மெய்யோடும் புணர்ந்தும் அங்ஙனம் புணர வழியும் தன்னுருவுதோன்றாது விகாரமின்றி இயல்பாற் பிறந்து அக்கரங்களுக் கெல்லாம் முதலாயுள்ள அகரம் போலத்[44] தனி முதலாயுஞ் சடத்திலுஞ் சித்திலுஞ் சேர்ந்தும் நிர்விகாரியாய், ஆன்மாக்களின் அறிவாயும் வேறுமாயும் உடனுமாயும் நிற்பினும்[45] அவ்வான்மாக்களின் சுட்டுணர்வினைக் கடந்து வாக்கு மனாதீதராய், முற்றறிவு முதலிய குணங்களை உடையவராய், அநாதி நித்தியராய், பசுக்களை முத்தியிற் சேர்க்கும் உபகாரியாய் உள்ளவரே சிவன்.[46]

மா. அப்பதியின் குணங்கள் யாவை?

ஆ. அவைதாம் முற்றறிவு, வரம்பிலின்பம், இயற்கையுணர்வு, தன்வயம், குறைவிலாற்றல், வரம்பிலாற்றல் என்னும் ஆறுமாம்.[47]

இவற்றுடன் தூயவுடம்பு, இயல்பாகவே பாசநீக்கம் ஆகியனவற்றையும் சேர்த்து எண்குணங்களாக சைவாகமங்கள் எடுத்தாள் கின்றன. இவற்றுள் தூயவுடம்பு, இயல்பாகவே பாசநீக்கம் இவையின்றாயினும் இயற்கை உணர்வை முற்றும் உணர்தலாலும், தூய உடம்பைப் பாசங்களின் நீங்குதலிலும் அடக்கியாயினும் ஆறாகக் கூறும் மரபும் உண்டு.[48] ஆறு குணங்களையுடையவன் என்னும் பண்பினடிப்படையில் 'ஷாட் குண்யன்' எனச்சுட்டப்படுதலை நினைவிற் கொள்க. இதனையடிப்படையாகக் கொண்டே இந்நூலாசிரியரும் அறுவகைக் குணங்களை குறிப்பிட்டுரைத்ததாகக் கருதலாம்.

மா. சிவன் வாக்கு மனாதீதராயின் ஆன்மாக்களை முத்தியிற் சேர்க்குமாறு யாங்கனம்?

ஆ. அவர் ஆன்மாக்கள் முத்தியடையும் பொருட்டு படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் பஞ்ச கிருத்தியங்களையுஞ் செய்ய வேண்டித் தமதருளாகிய பராசக்தியோடு பொருந்திச் சத்தியுஞ் சிவமுமாயிருப்பர். சக்தியாவது அக்கினிக்குச் சூடு

போலச் சித்தோடு பிரிவில்லாத வல்லமை.[49] இக்கருத்தினைச் "சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்"[50] என உமாபதி சிவாசாரியார் கூறுவதனாலறியலாம். இறைவன் அருவநிலை யிலிருந்தும் நீங்கி பிரபஞ்சத்தை நோக்கி பஞ்சகிருத்தியம் செய்யப் புகுமிடத்து தடத்த சிவன் என்ற பெயரைப் பெறுகின்றான். இவ் விறைவன் தனக்குக் கீழுள்ள உலகத்தில் தன் சக்தியினால் வியாபித்து நிற்கிறான். சக்தி ஒன்றே அது செயலால் பலவாறு புலப்படுவது போல இறைவனது சக்தியும் பலவகையாற் புலப்பட்டு பல்வேறு பெயர்களைப் பெறு கின்றது. இதனை,

'ஒன்றாய், இச்சா ஞானக் கிரியை யொன்றொரு
மூன்றாகி
நின்றிடும் சக்தி..ஆக்குவன் அகில மெல்லாம்'

என்கிறது சிவஞானசித்தியார் [51]. இவ்வாறாக மேற்கூறிய சக்திகளைக் கொண்டே இறைவன் ஐந்தொழில்களைச் செய்கின்றார் என்பது தெளிவாகின்றது. இக்கருத்தினை திருக்கடவூர் உய்யவந்த தேவரும், 'நாடனைத்தும் நங்கை யினால் செய்தளிக்கும் நாயகனும்'[52] எனக் கூறியிருக்கக் காணலாம்.

மா. படைத்தலாவது யாது?

ஆ. அதுதான் ஆன்மாக்களுக்குத் தனு கரண புவன போகங்களை மாயை யாகியமுதற் காரணத்தினின்று தோற்றுவித்தலேயாம்.

மா. காத்தலாவது யாது?

ஆ. அதுதான் தோற்றுவிக்கப்பட்ட தனு முதலியவற்றை நிறுத்துதலேயாம்.

மா. அழித்தலாவது யாது?

ஆ. அதுதான் தனுமுதலியவற்றை முதற்காரணத்தில் ஒடுக்கலேயாம்.

மா. மறைத்தலாவது யாது?

ஆ. அதுதான் ஆன்மாக்களை இரு வினைப்பயன்களாகிய போக்கியப் பொருட் களில் அமிழ்த்துதலே யாம்.

மா. அருளலாவது யாது?

ஆ. அதுதான் ஆன்மாக்களுக்குப் பாசத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளக்குத லேயாம்.[53]

இதனை கீழ்வரும் சிவப்பிரகாச கருத்தாலு ணரலாம்.

"ஏற்ற இவை அரனருளின் திருவிளை யாட்டாக இயம்புவர்கள் அணுக்கள் இடர்க் கடல் நின்றும் எடுத்தே ஊற்றமிக அருள் புரிதல் ஏதுவாக உரை செய்வர் ஒடுக்கம் இளைப்பொழித்தல் மற்றைத் தோற்றமல பாகம் வரக்காத்தல் போகம் துய்ப்பித்தல் திரோதாயி நிறுத்தலாகும்..."[54]

மா. சிவபிரான் படைத்தன் முதலிய தொழில்களைச் செய்வராயின் விகாரமெய்து வாரன்றே?

ஆ. செல்காலம் வருங்காலம் நிகழ் காலம் எனக் காண்பார்க்கு வேறுபட்டும் தான் விகாரமின்றி நிற்குங்காலம் போலவும், காந்தத்தில் அக்கினியை உண்டாக்கலும், தாமரைப் பூவை மலத்தலும் நீரை அழித்தலு மாகிய முத்தொழில் செய்தும் அதுபற்றி விகாரமெய்தாத ஞாயிறு போலவும் நின்று, பிரபஞ்சத்தைக்கரணத் தாற் படையாது இஃ திவ்வாறாகுகவென்று சங்கற்பமாத்திரத்தானே படைத்துக் காத்தழித்தலால் அவர் விகார மெய்துவாரல்லர். [55]

மா. பிரமன் முதலியோரும் படைத்தன் முதலிய தொழில்கட் குரியாராகலின் அவருஞ்சிவனோடொப்ப முதல்வராவான் செல்வர் போலும்?

ஆ. பிரமன் முதலியோர் படைப்பு முதலிய தொழில் செய்யும் செனனி முதலிய சிவசக்திகள் ஒரோ வொன்று சிறீகண்டத்து வாரத்தினாலே தம்மாட்டுப் பதிந்து நின்று செலுத்தப்படைத்தன் முதலிய அதிகாரத்தைப்

புண்ணிய விசேடத்தாற் சிவபிரான் மாட்டுப் பெற்றுடையரன்றி அவ்வத் தொழில்கட்குச் சுதந்திரரல்லர். சருவ சங்காரத்திற் பிரமன் முதலியோர் தத்தமாற்றலோடு நிலைபெறுவராயிற் சங்காரமாத லில்லை. ஆகலின் அக்காலத்தே அவர் படைத்ததன் முதலிய தொழில் செய்வாரல்லர் என்பது பெறப்படும். ஆகவே சருவசங்கார காலத்திற் பிரமன் முதலிய அனைவருஞ் சங்கரிக் கப்படுவர். எஞ்சி நின்ற சங்காரக் கடவுளை வேறு சங்கரிப்பார் இல்லை. ஆகலின் ஒடுங்கிய உலகை மீளத்தோற்றுவிப்பவரும் அவரேயாம். பின்னைப் பிரமன் முதலியோரைப் படைப்பவரும் பரமசிவனேயாகும். இங்ஙன மாகப் பிரமன் முதலியோர் முதல்வராவான் செல்லுமாறு யாங்ஙனம்?

பொது நூலாகிய வேதத்திலும் சிவ பெருமானுக்கே முதன்மை கூறப்பட்டது. அவருக்கே பெரும்பான்மையாக வணக்க வாக்கியங்கள் கூறப்பட்டன. சிவபிரானை யொழித்தொழிந்த ஏனைத்தேவர்க்கும் வேதத்தில் ஆண்டாண்டு வணக்கங்கூறிய தென்னையெனின் ஆற்று நீர் கடலை அடையுமாறு போல் ஏனைத்தேவர் மாட்டு கூறப்பட்ட வணக்கங்கள் சிவபிரானையே சென்றடைதலின் அங்ஙனங் கூறப்பட்டன. காணப்படும் இந்தப்பிரபஞ்சம் ஒரீசுரராலன்றி அநேக ஈசுரரால் நிலையுதலுடைத் தென்றல் பொருந்தாமையின் சிவபிரானே ஏகராகும் அவ்வீசுரராம்....... அச்சிவ பிரானையே 'பிரமாதிபதி' என்றும் இங்ஙனமே பலவாறு உபநிடதங் கூறுமாற்றானும் பிறவாற்றானும் அவரே முழுமுதற் கடவுளென்பதறிக. பிரமன் முதலிய தேவர்கட்குச் செய்யப்படும் வணக்கங்கள் உலகத்திற் பயன் தருவனவன்றி வீடு பேற்றினைத் தராவாம். 'சிவத்துவத்தைச் செய்தாளுஞ் சிவபிரானே புருடர்களால் வீடுபேற்றின் பொருட்டுத் தியானிக்கப்பாலர் வீடுபேற்றிற்கேதுவாகும் வார்த்தை இதுவே பிறிதில்லை' என வேதங் கூறுகின்றது.[56] ஆகவே உலகிற்கு முதல்வன் ஒருவனேயன்றிப் பலரில்லை என்பதும். பிரம விஷ்ணுக் களுடைய சிருஷ்டியையுந் திதியையுஞ் சிவனே யழித்துப் போடுவனென்றும், மீளவும் உண்டாமிடத்துச் சிவனே உண்டாக்குவன் என்றும், அச்சிவன் அவிகாரியென்றும் இவ்வுரையாடலால் சொல்லப்பட்டுள்ளது. இதனை சிவப்பிரகாசம்,

"...அயன் அரியும் அவனதுயர் அதிகாரத்து
வந்தமுறை தன்தொழிலே மன்னுவிப்பன் எல்லாம்
வருவிப்பன் விகாரங்கள் மருவான் வானின்
முந்திரவி எதிர்முளரி அலர்வுறு மொன்றலர்வான்
முகையா மொன்றொன்றுலரு முறையி னாமே"[57]

எனவும், சிவஞான சித்தியார்,

"நாரணன் அயனை யீன்றும் அயனும் நாரணனை யீன்றுங்
காரண மொருவருக்கங் கொருவர் தாமிருவருக்கும்
வாரண முரித்த வள்ளல் காரணமென்று மன்ற
ஆரணமுரைக்கும்பக்கத்தவர்களுமடைந்தா ரன்றே"[58]

எனவும் நுவன்றிருக்கின்றன. இக்கருத்து பரமசிவன் செயல்களனைத்திற்கும் காரணமாகித் தான் அவிகாரியாயிருப்பன்[59] எனவரும் ஞானா மிர்தக்கருத்துடன் ஒப்பிட்டு ரைக்கத்தக்கது.

**நிறைவுரை**

சங்கிரகம் என்னும் பெயரில் எழுந்த நூல்கள் யாவும் தாம் எடுத்துக்கொண்ட விடயங்களை மிகச்சுருக்கியுரைப்பதிலேயே கவனஞ்செலுத்தின. ஈழத்திலெழுந்த சங்கிரக நூல்களில் கார்த்திகேய பிள்ளையின் சைவ சித்தாந்த சங்கிரகமும், வேலுப்பிள்ளையின் சித்தாந்த சைவ சங்கிரகமும் சமகாலத்தனவா யினும் கருத்து விளக்க யுக்தியில் வேறுபட் டமைகின்றன. சித்தாந்த சைவ சங்கிரகம் எனும் இந்நூல் சைவசித்தாந்த மெய்யியல் சிந்தனைகளை வசனநடை, ஆசிரிய மாணவ உறவு, வினாவிடை வடிவமைப்பு, எளிமையான உரையாடல், இலகுவான மொழியமைப்புடன்

கூடிய தர்க்கித்தல் திறன், வழக்கு மொழிச் சொற்கையாளுகை என்றவகையில் கட்டமைக் கப்பட்டிருக்கின்றது. சைவ சித்தாந்த மெய்யியல் சார்பான செய்யுள் நடை நூல்களும் உரைகளும் சாதாரண மக்களால் விளங்கிக் கொள்ள முடியாமல் போன சூழலில் அவற்றை மக்களுக்கு எடுத்துச் செல்லும் - சொல்லும் செயற்பாடுகள் காலந்தோறும் இடம்பெற்றுவந்த புலத்தில், ஆசிரியர் மாணவ உரையாடலாக சைவ சித்தாந்தக் கருத்துக்கள் எளிமையும் பொருண்மையுமிக்கதாக இந்நூலில் எடுத்தாளப்பட்டிருக்கின்றது. முப்பொருட்களும் அநாதிநித்தியப் பொருட்களாக எடுத்தாளப்பட்டு, அவற்றின் இருப்பு, இலக்கணங்கள், இயல்புகள், அவற்றுக் கிடையேயான தொடர்பு, ஆன்ம இலக்கு, அவ்விலக்குக்கான சாதனா மார்க்கங்கள் முதலியனவும் விளக்கப்பட்டுள்ளன. வேலுப்பிள்ளையிடம் காணப்பட்ட மொழிப்பிரயோகம், வினாக்கட்டமைக்கும் நுட்பங்களின் முன்னோடிக் கூறுகளை ஆறுமுக நாவலரிடம் காணலாம். ஈழத்தில் சைவ சித்தாந்த மெய்யியல் சிந்தனைகளை மக்கள் மயப்படுத்தும் எளிய முயற்சியாகவும், அத்தத்துவ விருத்திக்கான முயற்சியின் புதிய வடிவமாகவும் இந்நூல் அமைந்துள்ளது என நுவலலாம்.

**அடிக்குறிப்புகள்**

1. கந்தையா,மு., (1985), "ஈழத்துச் சைவசித்தாந்தத் தொன்மை மேன்மைகள்" (ஆதிநாகர் முதல் அமெரிக்க சுவாமிகள் வரை), சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள், தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணிவிழாச்சபை வெளியீடு, தெல்லிப்பழை, ப.30.
2. மேலது, ப. 26.
3. வேலுப்பிள்ளை,வி., (2008), சித்தாந்த சைவ சங்கிரகம், பதிப்பு விபரம், ப.xv.
4. ஞானம் பாலச்சந்திரன், (2016), சித்திரக் கவித்திரட்டு, ஈழமும் தமிழும் (6), ஞானம் பதிப்பக வெளியீடு, கொழும்பு, பக்.458 - 459.
5. வேலுப்பிள்ளை,வி., மு.கு.நூ., ப.vii.
6. மேலது, ப.vii.
7. மேலது, ப.vii.
8. ஞானசம்பந்தன்,அ.ச.,(பதி.ஆ.), 2009, திருமந்திரம், கங்கை புத்தக நிலையம், சென்னை, பா.115.
9. சித்தாந்த சாஸ்திரம் மூலமும் உரையும், சிவப்பிரகாசம், 1994, மூன்றாம் பதிப்பு, சைவசித்தாந்தப் பெருமன்றம், சென்னை, பா. 9.
10. ஞானாமிர்தம் (மூலமும் பழையவுரையும்),2004, காசித்திருமடம், திருப்பனந்தாள், பா.52.
11. சிவஞான சித்தியார், விபரம், பா. 2.38.
12. சிவப்பிரகாசம், பா.19.
13. வேலுப்பிள்ளை,வி., மு.கு.நூ., ப. 4.
14. வேலுப்பிள்ளை, வி., மு.கு.நூ., பக்.1-4.

15. சிவஞானபோதம், சூத். 3.
16. வேலுப்பிள்ளை, வி., மு.கு.நூ., .பக். 77-79.
17. மேலது, ப.79.
18. மேலது, ப.79.
19. சிவஞானசித்தியார், பா. 254.
20. சிவப்பிரகாசம், பா- 33.
21. திருவருட்பயன், உயிரவைநிலை, பா.2
22. ஞானாமிர்தம், மு.கு நூ., பா.8.
23. வேலுப்பிள்ளை,வி., மு.கு.நூ.,ப. 85.
24. சிவஞானசித்தியார், பா. 126.
25. வேலுப்பிள்ளை,வி., மு.கு.நூ.,ப. 9.
26. சிவஞானசித்தியார், பா. 1.38.
27. ஞானாமிர்தம், பா. 21.
28. வேலுப்பிள்ளை, வி., மு.கு.நூ., பக். 10 - 11.
29. மேலது, ப. 10.
30. மேலது, ப. 67.
31. மேலது, ப. 68.
32. மேலது, ப. 68.
33. சிவஞானசித்தியார், பா. 143.
34. வேலுப்பிள்ளை,வி., மு.கு.நூ.,ப. 57.
35. செல்வமனோகரன், தி., (பதி.ஆ.), 2016, சிவசங்கர பண்டிதம், சைவ வித்தியா விருத்திச் சங்கம், திரு நெல்வேலி, யாழ்ப்பாணம், ப.102.
36. வேலுப்பிள்ளை, வி., மு.கு.நூ., பக். 13-14.
37. வேலுப்பிள்ளை, வி., மு.கு.நூ., பக். 12-13.
38. சுப்புரெட்டியார், ந., (2004), சைவ சித்தாந்தம் ஓர் அறிமுகம், திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, ப.41.
39. சிவஞானபோதம், சூத். 1.
40. மேலது, முதலதிகரணம், வார்த் திகம்.3.
41. சிவஞானசித்தியார், பா. 1.27.
42. சிவப்பிரகாசம், பா.16.
43. ஞானாமிர்தம், பா. 57.
44. திருவருட்பயன், பதிமுதுநிலை, பா.1
45. சிவஞானபோதம், சூத்.2, அதிகரணம்.1.
46. வேலுப்பிள்ளை,வி., மு.கு.நூ.,ப. 57.
47. மேலது, ப. 59.
48. சுப்புரெட்டியார், ந., மு.கு.நூ., பக். 47- 48.

49. வேலுப்பிள்ளை,வி., மு.கு.நூ.,ப. 59.
50. திருவருட்பயன்.பதிமுதுநிலை, பா.2.
51. சிவஞானசித்தியார். பா. 1.63.
52. திருக்களிற்றுப்படியார். பா. 78.
53. வேலுப்பிள்ளை, வி., மு.கு.நூ., பக். 59 - 60.
54. சிவப்பிரகாசம். பா.18.
55. வேலுப்பிள்ளை,வி., மு.கு.நூ.,ப. 65.
56. மேலது,.பக். 65 - 66.
57. சிவப்பிரகாசம். பா.17
58. சிவஞானசித்தியார். பா. 2. 277.
59. ஞானாமிர்தம். பா.64.